# தேயிலை ஆராய்ச்சிச் சபை - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேயிலை ஆராய்ச்சி சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்தரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

(அ) சபைக்கெதிராகத் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்குகளிலிருந்து ஏற்படக்கூடிய நிகழத்தக்க பொறுப்புக்கள் இ.க.நி.12 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தற்போதும் பயன்பாட்டிலுள்ள முற்றாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 18 இன் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

தலைவரின் கருத்துரைகளின் படி, விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உதவியுடன் இந்த விடயங்களிற்கான மீள்மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐஎஸ்ஓ சான்றிதழைப் பெறுவதற்காக 2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,381,613 தொகையான கொடுப்பனவுகள் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையற்ற சொத்தாக புறம்பாகக் காட்டப்படுவதற்குப்பதிலாக காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டு தொடர்பான ரூபா 34,518 பெறுமதியான இடைப்போக்கிலுள்ள பொருட்களை சம்பந்தப்பட்ட கணக்குகளிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதி, திட்டமிடல் அமைச்சிடமிருந்து கிடைந்த வாகனத்தின் பெறுமதி உறுதிப்படுத்தப்பட்டு, கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சென்ற் கூம்ஸ் தொழிற்சாலைக் கட்டிடத்திற்கான ரூபா 111,039 மொத்தத்தொகையான சிறிய திருத்தங்கள் இலாபத்திற்கெதிராக தாக்கல் செய்யப்படுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(உ) சென்ற் கூம்ஸ் தோட்டம் தொடர்பான ரூபா 5,494,090 தொகையான தொழிற்சாலை அபிவிருத்திச் செலவுகள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அர் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் நடைபெறும் வேலைகளாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) கணனிகள், மின்சார உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் போன்ற ஒரே வகையான நிலையான சொத்துக்களிற்காக வித்தியாசமான பெறுமானத்தேய்வு வீதங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

பின்வரும் இணக்கம் செய்யப்படாத மீதிகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) பின்வரும் நிலையான சொத்து மீதிகள் சபையால் தரப்பட்ட நிலையான சொத்துப் பட்டோலைகளுடன் அந்தச் சொத்துக்கள் பேரேட்டில் வகைப்படுத்தப்பட்டிருக்காமையால் இணக்கம் செய்யமுடியவில்லை.

| **விபரம்** | **தொகை** <br> **ரூபா.** |
|---|---|
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ ரீகெலி | 89,702,632 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ இரத்தினபுரி | 11,621,908 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ கந்தான | 12,064,360 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ கொட்டாவ | 3,003,998 |

| | |
|---|---|
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ பசறை | 2,084,061 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ தெனியாய | 2,813,438 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ தெனியாய | 1,224,761 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ மத்துகம | 294,624 |
| நிலையான சொத்துக்கள், சென்ற்கூம்ஸ் தோட்டம் | 17,321,421 |
| நிலையான சொத்துக்கள், சென்ற் யோகிம் தோட்டம் | 17,095,102 |
| | 157,226,305 |

(ஆ) மீளாய்வாண்டினிறுதியிலுள்ளவாறான தேயிலை கொள்வனவிற்காக தேயிலைச் சபை மற்றும் தேயிலை சிறுதோட்ட உடைமையாளர்களிலுள்ள கடன்கொடுத்தோருடன் ஒப்பிடுகையில் சென்ற் கூம்ஸ் தொழிற்சாலைக் கணக்குகளின் கடன்பட்டோர் பட்டோலையில் ரூபா 1,993,319 தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

### 1.2.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினிறுதியிலுள்ளவாறான கிடைக்க வேண்டிய பகுப்பாய்வுக் கட்டணங்கள் ரூபா 152,920 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 121,070 தொகையான மீதிகள் ஐந்து ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருந்தன.

(ஆ) காலப்பகுப்பாய்வின்படி, ரூபா. 307,751 தொகையான வியாபார மற்றும் நானாவித கடன்பட்டோர் அறவிடப்படாது 4 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருந்தன.

(இ) சென்ற் யோகிம் தோட்டத்தில் கடன்கள், முற்பணங்கள் முதலியவாறான ரூபா 22,175 தொகையான சம்பளப்பட்டியல் கடன்கள் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டம் | நிலையான படிகள் மீது ஊ.சே.நி உதவு தொகைகள் ஊழியர்களிடமிருந்து கழிக்கப்பட்டிருக்காததுடன் அந்தப் படிகள் மீதான வேலை கொள்வோனின் ஊ.சே.நி.உதவு தொகைகள் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் பந்தி 6.5.1 | 2011 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்கிடையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) திறைசேரி சுற்றுநிருபம் (i) 1978 திசெம்பர் 12 இன் இல. 842 | நிலையான சொத்துப்பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப் பட்டிருக்காததுடன் சபைக்கு சொந்தமான காணிகள் நிலையான சொத்துப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா. 26.8 மில்லியன் தேறிய பற்றாக்குறை விளைவித்திருந்ததிற்கு எதிராக முன்னயை ஆண்டில் ரூபா. 2.9 மில்லியன் தேறிய மிகையை விளைத்திருந்தது. சென்ற் கூம்ஸ் மற்றும் சென்ற் யோக்கிம் தோட்டங்களின் ரூபா 30.5

மில்லியன் தொகையான நட்டங்கள் காரணமாக நிதிசார் விளைவுகளில் ரூபா. 29.7 மில்லியன் வீழ்ச்சியைக் காட்டியது.

## 2.2 தோட்டங்களின் செயற்பாட்டு விளைவுகள்

சென்ற் கூம்ஸ் தோட்டம் மற்றும் சென்ற் யோகிம் தோட்டம் என்ற பெயர்களுடைய இரண்டு தோட்டங்களை சபை முகாமை செய்திருந்ததுடன் இந்தத் தோட்டங்களின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே தரப்படுகின்றது.

| | சென்ற் கூம்ஸ் தோட்டம் (லமிலியர் பிரிவு உட்பட) | | செனற் யோக்கிம் தோட்டம் | |
|---|---|---|---|---|
| **தேயிலை விற்பனைகள்** | **2011** | **2010** | **2011** | **2010** |
| அளவு (கிலோ கிறாம்கள்) | 344,131 | 246,924 | 396,287 | 496,847 |
| விற்பனைப் பெறுமதி (ரூபா'000) | 141,490 | 98,695 | 144,697 | 187,875 |
| ஏனைய வருமானம் (ரூபா'000) | 1,643 | 6,055 | 8,005 | 4,753 |
| மொத்த வருமானம் (ரூபா'000) | 143,133 | 104,750 | 152,702 | 192,628 |
| கழி: | | | | |
| மொத்த செலவினம் (ரூபா'000) | 140,942 | 99,509 | 168,726 | 191,494 |
| செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)(ரூபா'000) | 2,189 | 5,241 | (16,024) | 1,134 |
| முன்னைய ஆண்டு சீராக்கங்கள் (ரூபா'000) | (15,112) | (741) | (1,526) | (553) |
| தேறிய இலாபம் (நட்டம்) ரூபா'000 | (12,923) | 4,500 | (17,550) | 581 |
| ஒரு கிலோ கிராம் தேயிலைக்கான உற்பத்திக் கிரயம் (ரூபா) | 413.43 | 371.92 | 394.24 | 365.11 |
| ஒரு கெக்டெயருக்கான விளைச்சல் (கிலோ கிராம்) | 2,444 | 2,011 | 1,002 | 1,016 |
| தேறிய விற்பனைச் சராசரி (ரூபா ஒரு கிலோ கிராமிற்கு) | 405.78 | 394.85 | 359.31 | 372.72 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சென்ற் கூம்ஸ் தோட்டத்தின் விற்பனை அளவு 97,207 கிலோகிராம்களால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டு இலாபம் ரூபா 3,051,424 ஆல் குறைந்திருந்தது. இது பிரதானமாக வாங்கிய தேயிலை செலவின் அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டதாகும். எனினும், தேறிய இலாபம் முன்னைய ஆண்டுகளிற்கான குறைந்த பணிக்கொடை ஏற்பாட்டு சீராக்கங்கள் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 17,423,767 ஆல் குறைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் சென்ற் யோக்கிம், தோட்டத்தின் விற்பனை அளவு 100,560 கிலோகிராம்களால் குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் ரூபா 580,933 தேறிய இலாபத்திற்கெதிராக இலாபம் ரூபா 17,550,180 ஆன நட்டமாக மாற்றமடைந்திருந்தது. அதிக உற்பத்தி மற்றும் தொழிற்சாலையை இலாபகரமாக்குதல் என்பவற்றிக்காக சென்ற யோக்கிம் தோட்டம் ரூவான்புர எக்காபத்த கமிடிரிய சங்கத்துடன் (கமிடிரியக) ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை (எம்ஓயூ) செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 17,550,000 ஆன தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3. செயலாற்றல் மீளாய்வு

### 3.1 சபையின் செயற்பணிகள்

(அ) தேயிலை ஆராய்ச்சி சபையின் பிரதான செயற் பணிகளாவன, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளை நடாத்துதல், உதவுதல் மற்றும் ஊக்குவித்தல் தேயிலை பயிர்ச் செய்கை மற்றும் உற்பத்தி தொடர்புபட்ட பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் தொடர்பான புலனாய்வு செய்தல், தேயிலையிருந்தான உற்பத்தியை திருப்புதல் அது போல் பரவலாக்கல் மற்றும் தேயிலைப் பயிர்ச்செய்கையை சேதமாக்கும் பூச்சிகளைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் உட்பட்ட சபையின் பணிப்புரையில் ஆராய்ச்சி வேலைகளின் பெறுபேறுகளை பிரசுரித்தல் மற்றும் தேயிலையின் தரத்தை முன்னேற்றுதல் என்பனவாகும்.

தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டினிறுதியிலுள்ளவாறான சபையின் நிதிசார் செயலாற்றல் கீழே தரப்படுகின்றது.

| | நிகழ்ச்சித்திட்டம் | ஆண்டிற்கான ஒதுக்கீடு | | | பயன்பாடு | | | சதவீதமாக பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவரும் | மூலதனம் | மொத்தம் | மீண்டுவரும் | மூலதனம் | மொத்தம் | % |
| | | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | |
| i. | பயிர் முன்னேற்றம் | 13.65 | 13.89 | 27.54 | 13.42 | 7.54 | 20.96 | 76.10 |
| ii. | காணி உற்பத்தி திறன் விருத்தி | 13.82 | 16.07 | 29.89 | 14.50 | 10.15 | 24.65 | 82.46 |
| iii. | பயிர் முகாமைத்துவம் | 29.61 | 12.64 | 42.25 | 26.38 | 5.88 | 23.26 | 76.35 |
| iv. | அறுவடைக்கு பின்னரான தொழில் நுட்பம் | 14.17 | 14.11 | 28.28 | 15.03 | 11.07 | 26.10 | 92.29 |
| v. | வள திட்டமிடல் | 5.40 | 1.25 | 6.65 | 3.11 | 0.54 | 3.65 | 54.88 |
| vi. | உடைமையாளர்களிற்கான சேவைகள் | 38.25 | 38.54 | 76.79 | 38.13 | 12.24 | 50.37 | 65.59 |
| vii. | ஆராய்ச்சி முகாமைத்துவம் | 113.63 | 27.56 | 141.19 | 113.76 | 15.80 | 129.56 | 91.76 |
| viii. | உள்ளக சேவைகள் மற்றும் பராமரிப்பு | 50.74 | 31.30 | 82.04 | 51.69 | 9.15 | 60.84 | 74.15 |
| | மொத்தம் | 279.27 | 155.36 | 434.63 | 276.02 | 72.37 | 348.39 | 91.15 |

(ஆ) தொழிற்சாலைகளின் நடவடிக்கைகள் செயல்திட்டத்தில் உள்ளடங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் சபையின் தொழிற்சாலைகள் மற்றும் தோட்டங்களின் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை கணக்காய்வில் உறுதிப்படுத்தமுடியவில்லை.

## 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன**

(அ) தரப்பட்ட தகவல்களின் படி, முழுச் சம்பளத்துடன் கற்கை விடுமுறைகளைப் பெற்றதுடன் கட்டாய சேவைக்காலத்தில் சேவையாற்றத் தவறிய 10 அலுவலர்களிடமிருந்து ரூபா 27,090,600 ஆன தொகை கிடைக்க வேண்டியதாக இருந்ததுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து 2012 மார்ச் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1982 இலிருந்து லோவறி தேயிலை செயன்முறை செயற்திட்டமாக நடைபெறும் வேலைகளின் கீழ் கணக்குகளில் ரூபா 4,142,173 ஆன தொகை காட்டப்பட்டிருந்தது. தரப்பட்ட தகவல்களின்படி, இலங்கைத் தேயிலை செயன்முறைக்குப் பொருந்தக் கூடியதா என்று பரிசோதிப்பதற்காக ஆறு இயந்திரங்கள் மலைநாட்டில் ஆறு தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டிருந்ததுடன் இலங்கை தேயிலை செயல்முறைக்கு அந்த இயந்திரங்கள் பொருத்தமுடையதல்ல என்று பெறுபேற்றையளித்திருந்ததுடன் ஆகையால் செயற் திட்டம் கைவிடப்பட்டது.

எனினும், அந்த இயந்திரங்கள் எங்கே நிறுவப்பட்ட அந்தத் தொழிற்சாலைகளிலேயே இதுவரை பயன்பாடின்றி உள்ளதுடன் நீண்ட காலமாக கணக்குகளில் நடைபெறும் வேலைகளாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சென்ற யோக்கிம் தோட்டத்திலுள்ள 143.810 கெக்டெயர் பரப்பளவான மொத்த காணியில் 17.675 டெக்டெயர்கள் நீண்டகாலமாக வெளியார் தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததுடன் நிரந்தரமான வீடுகளை நிர்மாணித்து நெல், தேயிலை, றப்பர், தென்னை மற்றும் ஏனைய பயிர்களையும் பயிர் செய்திருந்தனர். ஆகையால் அந்த பயிர் செய்கையிலிருந்தான வருமானத்தை தோட்டம் இழந்திருந்ததுடன் காணிகளை வெற்றிடமாக்குவதற்காக அந்த மக்களிற்கெதிராக 2012 மார்ச் 31 வரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபை மற்றும் சென்ற் கூம்ஸ் தோட்டத்திற்கு சம்பந்தமற்ற சில வெளித் தரப்பினர் பெரிய பரப்பளவில் சபை மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிடமிருந்து முறையான அனுமதி பெற்றுக்கொள்ளாது மரக்கறிகளை பயிர் செய்திருந்ததுடன் அதிக வருமானத்தை உழைத்திருந்தனர். அங்கீகாரமற்ற காணி பயன்பாட்டு விபரங்கள் கோரப்பட்ட போதிலும் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்கெதிராக ஒரு சிறுவர் பாடசாலை ஆசிரியையால் தொடரப்பட்ட வழக்கிற்கான சட்டக்கட்டணங்களாக சபையால் ரூபா 125,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் சிறுவர் பாடசாலை பெற்றார் சங்கம் சபையின் வனவில் இயங்கியிருந்தது. சிறுவர் பாடசாலையின் முகாமைத்துவம் சிறுவர் பாடசாலையின் நிறைவேற்றுக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதால் இந்த விடயம் சபைக்குச் சம்பந்தம் அற்றதென்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஊ) சென்ற் யோக்கிம் தோட்டத்தில் இரண்டு ஊழியர்களின் பதவியுயர்வு தொடர்பாக சபைக்கு எதிராக இரத்தினபுரியில் தேசிய தோட்ட சேவையாளர் சங்கத்தால் 2008 இல் ஒரு நீதிமன்ற வழக்கு தொடர்பட்டிருந்தது. சபையானது இணக்கப்பாட்டிற்கு வராது வழக்கை முன்னெடுத்துச் சென்றதுடன் மீளாய்வாண்டினிறுதிவரை தனியார் சட்டத்தரணிகளிற்கு ரூபா 901,500 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த வழக்கு 2012 மாாச் 31 வரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

---

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) பதவியணி நிலை**

---

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2011 ஓகத்து 24 ஆம் திகதிய கடிதத்தின்படி அனுமதிக்கப்பட்ட சபையின் புதிய ஆளணி 443 ஆனதுடன் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் படி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் பதவியணி நிலைமை கீழே தரப்படுகின்றது. எனினும், வெற்றிடங்களை நிரப்புவதற்கு சபையால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| பதவி அணி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர் தரங்கள் | 87 | 39 | 48 |
| நிறைவேற்றுனர் அல்லாத தரங்கள் | 206 | 121 | 85 |
| சிற்றூழியர் தரங்கள் | 150 | 80 | 70 |
| மொத்தம் | 443 | 240 | 203 |

தலைவரின் பதிலின்படி 2011 செப்தெம்பரில் ஆட்சேர்ப்புத் திட்டம் அனுமதிக்கப்பட்டது இது வரை மிகவும் அத்தியாவசிய பதவிகளை மாத்திரம் நிரப்புவதற்கு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு அங்கீகாரம் வழங்கியிருந்தது. நிறுவனமானது தற்போது புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அனுமதியைப் பின்தொடர்ந்து ஆளணியைச் சேர்க்கும் செயல்முறையிலுள்ளது.

### (ஆ) ஆளணிக் கிரயம்

தரப்பட்ட தகவல்களின்படி தொழிற்சாலை தொழில்லாளர் தவிர்ந்த மீளாய்வாண்டிற்கான ஆளணிக் கிரயம் சென்ற ஆண்டுடன் ஒப்பிடப்பட்ட கீழே தரப்பட்டுள்ளது.

| பதவியினர் வகுதி | ஊழியர்களின் எண்ணிக்கை | | மொத்த வேதனம் | | ஒரு ஊழியாருக்கான கிரயம் | |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2010 | 2011 ரூபா | 2010 ரூபா | 2011 ரூபா | 2010 ரூபா |
| நிறைவேற்றனர் | 51 | 48 | 25,622,590 | 24,989,897 | 516,598 | 527,662 |
| நிறைவேற்றுனர் அல்லலாதோர் | 145 | 138 | 51,148,457 | 49,360,723 | 375,473 | 380,282 |
| சிற்றூழியர்கள் | 75 | 47 | 17,368,699 | 15,216,663 | 232,250 | 327,002 |
| | 271 | 233 | 94,139,746 | 89,567,283 | 371,604 | 415,720 |

**(இ) ஆட்சேர்ப்புக்கள்**

2011 பெப்ரவரி 01 இல் மேற்கொள்ளப்பட்ட பிரதிப் பணிப்பாளரின் (நிருவாகம்) நியமனம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 நொவம்பர் 14 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தின்படி ஆட்சேர்க்கப்பட்ட இந்த அலுவலர் வேண்டப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டிருக்கவில்லை.

(ii) நேர்முகப் பரீட்சைப் புள்ளித் தாள்களின்படி, ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களின்றி ஏனைய நான்கு விண்ணப்பத்தாரிகளிற்கிடையில் நேர்முகப் பரீட்சைச் சபையால் குறித்த அலுவலருக்கு உயர்ந்த புள்ளிகள் வழங்கப்பட்டிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(iii) தரப்பட்ட தகவல்களின்படி, சபையால் மேற்படி குறித்த அலுவலருக்கு 2011 பெப்ரவரி தொடக்கம் 2012 சனவரியிலான சம்பளங்கள் மற்றும் உள்ளக மற்றும் வெளி தொழிற் கட்டணங்களாக முறையே ரூபா 699,592 மற்றும் ரூபா 308,097 ஆகிய தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.

**3.4 மோட்டார் வாகனங்களின் பயன்பாடு**

50 வாகனங்கள், 09 லொறிகள், 13 ரக்ரகர்கள் மற்றும் 42 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை உள்ளடக்கிய சபையின் வாகன அணி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதினொரு மோட்டார் வாகனங்கள் நீண்ட காலமாக திருத்தங்கள் செய்யப்படாது பயன்பாடின்றி இருந்தன.

(ஆ) பட்டோலைகளுடன் ஒப்பிடுகையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மெய்மையாய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டில் சபையின் ஒரு வாகனத்திற்கு ஒரு புதிய பொடியும் இயத்திரமும் பொருத்துவதற்காக ஒரு தனியார் கராஜிற்கு ரூபா 1,650,060 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் திருத்தத்திற்கான சபையின் அனுமதி மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடமிருந்தான பதிலீடு செய்வதற்கான முன் அனுமதி என்பன பெறப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

செய்யப்பட்ட திருத்தங்களின்பின் 06 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் வாகனம் மீண்டும் திருத்தத்திற்காக அனுப்பப்பட்டமையால் திருத்தங்கள் திருப்திகரமான நிலையிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் 08 வாகனங்கள் விபத்துக்களை அடைந்திருந்தன. 05 வாகனங்களிற்கான திருத்தங்களிற்காக ரூபா 142,715 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 99,028 ஆன தொகை காப்புறுதி இழப்பீடாகக் கிடைத்திருந்தது. ஏனைய மூன்று வாகனங்களிற்கான ரூபா 162,075 மொத்தத் தொகைக்கான திருத்தங்களிற்காக காப்புறுதிக் கோரிக்கைகள் 2012 மார்ச் 31 வரையிற்கூட அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பணிக்கொடை ஏற்பாடுகளின் முதலீடுகள்

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு எதிர்காலப் பொறுப்பைச் சந்திப்பதற்காக சபையால் ரூபா 140,157,472 தொகையான பணிக்கொடை ஏற்பாடு முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களி தகைமை மற்றும் நல்லாட்சி

### 4.1 கூட்டுத் திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதி பீஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றுநிருபத்தின்படி கூட்டுத்திட்டம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட உண்மையான முன்னேற்ற அறிக்கையுடன் சேர்ந்த நடவடிக்கைத் திட்டத்தை 2008-2012 வரையான கூட்டுத்திட்டத்துடன் ஒப்பீடு செய்ய முடியவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுக்கிளை சபையின் பணிப்பாளரிடமிருந்து சுதந்திரமானதாக இருக்கவேண்டும். சபையின் அமைப்பு வரைபடத்தின்படி, உள்ளகக் கணக்காய்வாளர் சபையின் பணிப்பாளரிற்குக் கீழ் பணிசெய்வதுடன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் கீழிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வில் பாதீட்டிற்கும் உண்மையானவற்றிற்குமிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால் அது பாதீடானது முகாமைத்துவக கட்டுப்பாட்டின் தாக்கமான கருவியாக பயன்படுத்தப்படவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் பொழுது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கை மூலம் தலைவரின் கவனத்திற்குத் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) புலமைப்ரிசில்கள் வழங்குதல்
(இ) முற்பணங்களின் தீர்ப்பனவு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கிடைக்க வேண்டியவைகளும் செலுத்தப்பட வேண்டியவைகளும்
(ஊ) நிதி முகாமைத்துவம்
(எ) பாதீடு
(ஏ) தோட்டங்கள் முகாமைத்துவம்